செய்தி வெளியீடு எண்:517 நாள் : 13.10.2014

## செய்திக் குறிப்பு

ஓமன் நாட்டிலுள்ள மருந்தக நிறுவனத்திற்கு ஆங்கிலப் புலமையுடன் B.Pharm மற்றும் புரோமெட்ரிக் தேர்வு முடித்த 30 முதல் 35 வயதிற்குட்பட்ட ஆண் மருந்தாளுநர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு தகுதி மற்றும் அனுபவத்திற்கேற்ப ஊதியத்துடன் ஓமன் நாட்டின் தொழிலாளர் சட்டதிட்டத்திற்குட்பட்ட மருத்துவ வசதியும் அளிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணிக்கு விருப்பமும் தகுதியும் இருப்பின் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் ஒரு புகைப்படத் துடன் எண்.42, ஆலந்தூர் சாலை, ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலகம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை—32 என்ற முகவரியிலுள்ள தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு தபால் மூலமோ அல்லது ovemclsn@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ 17.10.2014 தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்கள் அறிய 044—22502267/22505886 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் அல்லது www.omcmanpower.com என்ற இணையதளத்திற்குச் சென்றும் அறியலாம்.

நிர்வாக இயக்குநர்
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
சென்னை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**